# இரட்சிப்பு

RATCHIPPU

RATCHIPPU = SALVATION

Volume-12 | March-2023 | Issue-10

Price Rs.5-00 | Annual Subscription Rs.60/-


## தவக்காலம் — Lenten Season



### ஒழுக்கக் கட்டுப்பாடு

இறைச்சி, மது, கேளிக்கை, உடல் ரீதியான சிற்றின்பங்கள், ஆடம்பரங்களுக்கு ஒரு சுய-கட்டுப்பாடு.



### சுய-வெறுப்பு

பொழுதுபோக்கு, சமூக ஊடகங்கள், தொலைக்காட்சி போன்ற வற்றை விட்டுவிட்டு குடும்ப-திருச்சபை உறவுகளை புதுப்பித்தல்.



### திருமறைத் தியானம்

40 நாட்களும் திருமறை வசனங்களை தியானித்து ஊக்கமும் ஆக்கமும் பெறுவது சிந்தையை கடவுளின் வழிக்குத் திருப்பும்.



### மன்றாட்டு ஜெபம்

சரியான நேரம்-இடத்தை தெரிந்துகொண்டு, தங்களுக்காக, பிறருக்காக, திருச்சபைக்காக, அருட்பணிக்காக ஜெபித்தல்.



### உபவாசம்

தபசு காலத்தில் மதியவுணவை தவிர்த்து அல்லது அரை-உணவு உண்டு அந்நேரத்தில் ஜெபித்தல்.



### தான-தர்மம்

ஏழை மக்களுக்கு பணம், உணவு, புத்தாடை போன்ற தேவை களை வழங்கி கிறிஸ்துவின் சித்தம் நிறைவேற்றுதல்.

## இயக்குநர் கடிதம்...

From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய திருப்பெயரில் அனைவரையும் வாழ்த்துகிறேன். ‘தபசுக் காலம்’ எனப்படும் தவக்காலத்தை ஆசரித்துக்கொண்டிருக்கிறோம். ‘லெந்து-காலம்’ எனப்படுகின்ற

இந்தக் காலத்தை நமது மாற்றுருவாக்கத்திற்கான சுயபரிசோதனையின் காலமாக எடுத்துக்கொண்டு, மன்றாட்டு ஜெபம், தவம், ஒழுக்கக்கட்டுப்பாடு, சுயவெறுப்பு, திருமறைத் தியானம், உபவாசம், தானதர்மம் போன்ற செயல்முறைகள் வாயிலாக நமக்குச் சமீபமாயிருக்கும் நம் கடவுளிடம் இன்னும் அதிகமாய் கிட்டிச்சேர நம்மை அர்ப்பணிப்போம்.

நமது ஊழிய இயக்குநரின் இம்மாத ஊழியங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். ‘இரட்சிப்பு’ பத்திரிக்கை ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், வலைதள ஊழியங்கள் (WEBSITE ADDRESS: www.ratchippu.in/ratchippu.in), புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், NMS-MISSIONARY ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் ஆகிய நமது அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இம்மாதத்திற்கான ‘ஜெப-ஜன்னல்’ ஜெப-நேரங்ளில் (மார்ச் 10, 17, 24) இணைந்து மன்றாட்டு ஜெபத்தில் ஈடுபட அனைவரையும் அழைக்கிறோம். ‘அனைவரும்-ஊழியத்தில்’ - எனப்படும் நமது கைபிரதி ஊழிய திட்டத்தில் இணைந்து செயல்படவும் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். வேதாகம போட்டிக்கான பதில்கள், ஜெப-குறிப்புகள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கை அனுப்புவோர் ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள் (Online-வங்கி மற்றும் தொடர்பு விபரம் பக்கம் 7-ல்).

தேவசமாதானம் நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்கள் உடன் ஊழியன்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

**வேத-வரிகள்-147** மத்தேயு 24:32,33

# தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

### சத்திய வேதம் (ரேனியஸ்-1840)

அத்திமரத்தில் தளிர்தோன்றி, இலைகளை கொடுக் கிறபொழுது, வசந்தகாலம் சமீபமாயிருக்கிறதென்று அறிவீர்கள். அப்படிப்போல, இவ்வடையாளங்களை நீங் கள் காணும்போது, மனிதனுடைய குமாரன் சமீபமாக யிருக்கிறார் என்று அறியக்கடவீர்கள்.

### பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)

அத்திமரத்திலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும் போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர் கள். அப்படியே இந்த அடையாளங்களை நீங்கள் காணும்போது, மனுஷகுமாரன் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்.

### திருவிவிலியம் (பொது-1995)


அத்தி மரத்தில் கிளைகள் தளிர்த்து இலைகள் தோன் றும்போது கோடைக்காலம் நெருங்கிவிட்டது என நீங்கள் அறிகிறீர்கள். அவ்வாறே இந்த அறிகுறிகளை நீங்கள் காணும்போது மானிடமகன் கதவை நெருங்கி வந்துவிட்டார் என்பதை அறிந்து கொள்ளுங்கள்

### பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)


அத்திமரம் துளிர்விட்டு வளரும்போது, கோடை காலம் அருகிலுள்ளது என அறிகிறீர்கள். அதேபோலத்தான் இந்த அடையாளங்களை நீங்கள் காணும்போது, மனுஷகுமாரன் வரும் காலம் நெருங்கிவிட்டதை நீங்கள் அறியலாம்.

வசன தியானம் - 140

# இயேசுவின் தவக்காலம்



## சோதனையும் சாதனையும்




**Mark-1:12,13** மாற்கு-1:12,13

ஆவியானவர் இயேசுவை வனாந்தரத்திற்குப் போகும்படி ஏவினார். அவர் வனாந்தரத்திலே நாற்பதுநாள் சாத்தானால் சோதிக்கப்பட்டார். தேவதூதர்கள் இயேசுவுக்கு ஊழியஞ்செய்தார்கள். மாற்கு-1:12,13

தவக்காலம் எனப்படும் தபசுக் காலத்தை 40-நாட்கள் நாம் கடைபிடிக்கும் இந் நாட்களில் இயேசுவின் தவக்காலத்தை உற்றுநோக்கிக் கற்றுக்கொள்வோம். இயேசு தம் 30ம் வயதில் யோவானால் யோர்தான் ஆற்றில் திருமுழுக்கு பெற்று, தமது மீட்பின் பணியைத் தொடங்கினார். அவர் வனாந்தரத்தில் 40-நாட்கள் தங்கி உபவாசம் இருந்தார். இக்காலத்தில் ஏற்பட்ட சோதனைகளை, அவர் வேதவசனங்களின் துணையுடன் வெற்றிகண்டு சாதனை செய்தார். சோதனையைச் சாதனையாக்கிய இயேசு, ‘‘காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்.’’ (மாற்-1:15) என மக்களை கூவி-அழைத்தார். இவ்வாறாக, இயேசுவின் தவக்காலம், மீட்பின் பணியை துணிவோடு நிறைவேற்ற அவருக்கு பலமளித்தது.

நாம் கடவுளின் மக்களாக வாழவேண்டுமெனில், சோதனைகளில் நாம் புடமிடப் பட்டாக வேண்டும். மனமாற்றம் இக்காலத்தில் மிக அவசியமானது. ஆத்தும பரிசோதனைக்கு நம்மை நாமே உட்படுத்தவேண்டும். இது நாம் கடவுளிடமிருந்து எவ்வளவு விலகி நிற்கிறோம் என்பதை அறிந்து கொள்ள உதவும். சோதனை களை எதிகொண்டு அவற்றைச் சாதனைகளாக்கிய இயேசுதாமே நம் சோதனை களை மேற்கொள்ளும் ஆற்றலை நமக்கு அருளுவார். ‘‘அவர்தாமே சோதிக்கப் பட்டுப் பாடுபட்டதினாலே, சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்ல வராய் இருக்கிறார்.’’ (எபி-2:18). இந்த தவக்காலம் மனமாற்றத்தின் காலம். கடவுளோடும் சக-மக்களோடும் நம்மை ஒப்புரவாக்கும் காலம். விசுவாசத்தின் மையமாகிய இயேசுவின் பாடு-மரணத்தை ஆசரிக்க நம்மை ஆயத்தப்படுத்தும் காலம். ஆவி-ஆத்துமா-சரீரத்தை ஒருமுகப்படுத்தி கடவுளுக்கு நம்மை அர்ப்பணிக் கும் காலம் என்பதை உணர்ந்து காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்வோம்.



அன்பானவர்களே! விசுவாச வாழ்வில் நாம் அனுதினம் எதிர் கொள்ளும் பாடுகள், வேதனைகள், சோதனைகள், சோர்வு களைக்கண்டு நாம் துவண்டுவிடக்கூடாது. நம்மை அழைத்த கடவுள் உண்மையுள்ளவர். நிச்சயம் அவர் வழி நடத்துவார்.

ஜெபம்: எங்கள் பரம பிதாவே! உமது மகனாகிய இயேசுவைப் போல சோதனைகளை மேற்கொண்டு அவற்றை சாதனைகளாக் கும் ஆற்றலை எங்களுக்கும் தந்தருளும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் பிதாவே. ஆமேன்.

படைப்பு: REV. SJD. தர்மராஜா, ஆயர் & அபிவிருத்திச் செயலர், இந்திய சுதேச மிஷனரி சங்கம், சென்னை.
REV. SJD. DHARMARAJA, PRESBYTER & HON. PROMOTIONAL SECRETARY, NATIONAL MISSIONARY SOCIETY OF INDIA

தபசுக் கால சிறப்பு தேவசெய்தி...


அருட்திருமதி
எஸ்தர் சந்தியா

# தபசுக் காலம்
## மாற்றுருவாக்கத்துக்கான காலம்

அந்தத் திராட்சரசம் எங்கேயிருந்து வந்ததென்று பந்தி விசாரிப்புக் காரனுக்குத் தெரியாததினால், அவன் திராட்ச ரசமாய் மாறின தண்ணீரை ருசிபார்த்தபோது, எந்த மனுஷ னும் முன்பு நல்ல திராட்ச ரசத்தைக் கொடுத்து, ஜனங்கள் திருப்தியடைந்தபின்பு, ருசிகுறைந்ததைக் கொடுப்பான், நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே என்றான். யோவான் 2:9,10

**Rev. K. Esther Sandhya** B.Sc., B.D.
PRESBYTER, CSI IRUGUVAI PASTORATE, CSI MADRAS DIOCESE, IRUGUVAI, ANDHRA PRADESH, SOUTH INDIA.

இயற்கையில் காலநிலை மாற்றம் என்பது இன்றியமையாத ஒன்றாகும். அந்தந்த காலத்திற்கு தேவையான பருவநிலை மாற்றம் அந்தந்த காலத்தில் நடைபெற வேண்டும். இல்லையென்றால் இயற்கை சீர்கெட்டுவிடும். அப்படிபட்ட பருவநிலை மாற்றத்தில் வசந்த காலம் (summer season) என்பது மிக முக்கியமான ஒன்று. மரங்களைல்லாம் தங்கள் இலைகளை உதிர்த்துவிட்டு புத்துயிர் பெறும் வகையில் மீண்டும் துளிர்விடும் காலம்தான் இந்த வசந்த காலம்.

லூக்கா-21:29, 30ல் ‘‘அத்திமரத்தையும் மற்றெல்லா மரங்களையும் கவனித்துப் பாருங்கள், அவைகள் துளிர்க்கிறதை நீங்கள் காணும்போது வசந்தகாலம் சமீபமாயிற்றென்று அறிகிறீர்கள்.” என்று இயேசு குறிப்பிடுகின்றார். வசந்த காலம் என்பது இயற்கையில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்துகிற ஒரு காலமாக இருக்கின்றது. அதே வசந்த காலத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் லெந்து காலம் என்று 40 நாட்கள் அனுசரித்து வருகின்றோம். வசந்த காலம் இயற்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதைபோல லெந்து காலம் எனப்படும் இந்த தபசுக் காலம் நமது நிலைவாழ்வுக்கான எப்படிபட்ட மாற்றத்தை நம்மில் ஏற்படுத்தும் காலமாக இருக்கப்போகிறது போகின்றது என்பதை யோவான் 2:1-11 வசனங் களின் துணையுடன் சிந்திக்க அழைக்கப்படுகிறோம்.

1. இயேசு கிறிஸ்துவின் மாற்றம்: **A change in Josus Christ.**

கலிலேயாவில் உள்ள கானாவூரில் நடைபெற்ற ஒரு திருமணம் நிகழ்வைக் குறித்து யோவான் 2:1-11ல் நாம் வாசிக்கிறோம். அங்கே இயேசுவும் அவருடைய சீஷர்களும் மற்றும் இயேசுவின் தாய் மரியாளும் இருந்தார்கள். அந்த திருமண விழாவின்போது திராட்சைரசம் குறைவுபட்டதை அறிந்த இயேசுவின் தாய் அவரிடம் சென்று உதவி கேட்கின்றார்.

‘‘அவர்களுக்கு திராட்சரசம் இல்லை’’ என்றார் (வசனம்-3), அதற்கு இயேசு அவருயை தாயாரினிடத்தில் கூறுகின்றார், ‘‘ஸ்திரீயே, எனக்கும் உணக்கும் என்ன? என் வேளை இன்னும் வரவில்லை என்றார்’’ (வசனம்-4). இந்த வார்த்தைகளின் முலமாக இயேசு கிறிஸ்து ஒரு பிரிவை தனக்கும் தன் தாய் மரியாளுக்கும் இடையியில் ஏற்படுத்துகின்றார். ஏதோ முன்பின் தெரியாத மூன்றாவது நபரிடத்தில் பேசுவதுபோல இயேசு தன் சொந்த தாயிடத்தில் பேசுகின்றார்.

இதன் மூலம் தான் மரியாளின் மகனல்ல ‘தேவனுடைய குமாரன்’, என்கிற மாற்றத்தை ஏற்படுத்துகின்றவராக இயேசு கிறிஸ்து காணப்படுகிறதை நாம் இங்கு பார்க்கிறோம்.

இயேசு கிறிஸ்துவில் எதற்காக இந்த மாற்றம்?

இது கடவுளுயை ஊழியத்தை செய்வதற்கான நேரம்.

It’s the Time to do God’s ministry

இயேசு கிறிஸ்துவின் இந்த மாற்றம் என்பது கடவுளுடைய ஊழியத்தை செய்வதற்கான நேரம் வந்துவிட்டதையும், தன்னை அனுப்பின பிதாவினுடைய சித்தத்தை நோக்கி பயணிக்கும் நேரம் வந்துவிட்டதையும், உணர்த்தும் வெளிப்பாடு ஆகும்.

கடவுளுடைய ஊழியம் எண்பது சாதாரணமான காரியமல்ல. அவருயை ஊழியம் என்பது நன்மைக்கும், தீமைக்குமான போராட்டம். அநீதிகளை எதிர்ப்ப தும், திக்கற்றவர்க்கு உதவிகளை செய்வதும், துயரப்படுகிறவர்களுக்கு ஆறுதல் அளிப்பதும் கடவுளுடைய ஊழியங்களாகும். இதைத்தான் லூக்கா 4:17-20 வரையுள்ள வேதபகுதியில் நாம் வாசிக்கிறோம். நாசரேத்திலுள்ள ஜெபாலயத்தில் ஏசாயா தீர்க்கதரிசி கூறியவற்றை வாசித்து இயேசுகிறிஸ்து விளக்கம் அளிப்பதை நாம் இங்கு காணமுடியும்.

அன்று, ‘‘உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கி யம் இன்றையத்தினம் நிறைவேறிற்று’’ என்கிறார் இயேசு (லூக்கா 4:21).

தேவனுயை சித்தத்தின் படியும், ஏசாயா தீர்க்கதரிசியின் வார்த்தையின் படியும், கடவுளின் ஊழியத்தை ஜனங்கள் மத்தியில் செய்திட கடவுளின் மகனாகிய தாமே மனித அவதாரம் எடுத்து வந்துள்ளதை இயேசு இங்கு அறிவித்து, அதற்கான மாற்றங்களை தன் ஊழியத்திலும், குடும்பத்திலும் ஏற்படுத்திக் கொண்டார் என்பதை இப்பகுதியில் நாம் அறிந்துகொள்கிறோம்.

இயேசு கிறிஸ்து, தேவன் தன்னை அனுப்பின நோக்கத்தை தெளிவாக அறிந்து கொண்டு மாற்றுருவாக்கத்துக்கு தன்னை அர்ப்பணித்தார். இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிற நாமும்கூட தேவனுயை சித்தத்தை உணர்ந்து, தேவனுடைய ஊழியத்தை செய்ய, அதற்காக நம்மை சீர்படுத்திக்கொள்ள, அதற்கான மாற்றங் களை நம்மிலும் நம் குடும்பங்களிலும் ஏற்படுத்திக்கொண்டு மாற்றுருவாக்கம் அடைய இந்த தபசு காலத்தை பயன்படுத்திகொள்வோம்.

2. தண்ணீரின் மாற்றம்: **A change in Water**

கானாவூர் திருமண விழாவில், திருமண-வீட்டார், திராட்சைரசம் குறைவினால் செய்வதறியாமல் விழித்துக்கொண்டிருந்தபோது இயேசு கிறிஸ்து ஒரு அற்புதத்தைச் செய்கின்றார்.

செய்கின்றார். அங்கே, யூதர்கள் மதச்சடங்குகளின்படி தங்களை சுத்தப்படுத்திக் கொள்வதற்கான தண்ணீரை நிரப்புவதற்கு வைத்திருந்த ஆறு கற்சாடிகளில் தண்ணீரை ஊற்றி நிரப்பும்படி வேலைக்காரரிடத்தில் கூறுகிறார் (வசனம்-7). அவர்கள் சாதாரண தண்ணீரை கொண்டு அவைகளை நிரப்பினார்கள்.

அதை இயேசு கிறிஸ்து திராட்சரசமாக மாற்றி, ‘‘அதை மொண்டு, பந்திவிசாரிப்பு காரனிடத்தில் கொண்டு போங்கள்’’ என்று கூறினார் (வசனம்-8).

அதை ருசிபார்த்த பந்திவிசாரிப்புக்காரன், ‘‘எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சரத்தை கொடுத்து, ஜனங்கள் திருப்தியடைந்த பின்பு, ருசி குறைந்ததை கொடுப்பான், நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்தீரே’’ என்று மணவாளனிடத்தில் கூறுகின்றான். (வசனம்-10).

‘‘இயேசு இந்த அற்புதத்தை செய்து, தமது மகிமையை வெளிப்படுத்தினார். அவருடைய சீஷர்கள் அவரித்தில் விசுவாசம் வைத்தார்கள்’’ (வசனம்-11). அவர் நிறமற்ற, மணமற்ற, சுவையற்ற தண்ணீரை. சுவை மிகுந்த, நல்ல நிறமும், மணமும் நிறைந்த திராட்சரசமாக மாற்றினார்.

தண்ணீரில் எதற்காக இந்த மாற்றம்?

இது, நம்மை கொண்டு கடவுள் கிரியை செய்வதற்கான நேரம்:

It’s time for God to Act through us.

இயேசுவானவர் சாதாரணதண்ணீரின் உதவியுடன் அந்த குடும்பத்தை அவமானத் திலிருந்தும், வீணான பேச்சுகளிலிருந்தும், குறைவுகளிலிருந்தும விலக்கிக் காத்தார். அந்த தண்ணீரை போல நம்மையும் கடவுள் எடுத்து பயன்படுத்த நாம் பாத்திரவான்களாக வேண்டும். நம்மை கொண்டு கடவுள் தம் கிரியைகளைச் செய்வதற்கு நம்மை நாம் தகுதி படுத்திகொள்ள வேண்டும். தகுதியில்லாத நம்மைத் தகுதிபடுத்தவும் அவர் வல்லவராக இருக்கின்றார். அதற்கு நாம் செய்ய வேண்டிய ஒரே காரியம் ஒப்படைப்பு. கடவுளிடத்தில் நம்மை ஒப்புக் கொடுப்போம். அப்படி ஒப்புக்கொடுக்கும்போது, தகுதியில்லாத நம்மை தகுதிப் படுத்தி நம்மில் நேர்மைறையான, சிறப்புமிக்க மாற்றங்களை ஏற்படுத்தி தம்முடைய கிரியைகளை நம்மை கொண்டு நடப்பிப்பார் என்பதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை.

நம் வாழ்விலும் இந்த லெந்து காலத்தில், நமக்குள் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டு கிறிஸ்துவுக்குள் மாற்றுருவாக்கம் அடைய நம்மை அர்ப்பணிப்போம். கடவுளுடைய ஊழியத்தை நாம் செய்வதற்கும், நம்மை கொண்டு கடவுள் தம் கிரியைகளை நடப்பிப்பதற்குமான கருவியாக இந்த மாற்றுருவாக்கம் அமைந்திட விசுவாசத்தோடும், ஜெபத்தோடும் ஆண்டவரக்காகக் காத்திருப்போம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
அருட்திருமதி. எஸ்தர் சந்தியா கிங்ஸ்லி

அருட்திருமதி.. எஸ்தர் சந்தியா கிங்ஸ்லி, ஆயர், சி.எஸ்.ஐ. இருகுவாய் குருசேகரம், சென்னை பேராயம்,
இருகுவாய், ஆந்திரப்பிரதேசம், தென்னிந்தியா.


BETHEL BIBLE COLLEGE
A Ministry of Gospel Mission of India (GMI)
(Affiliated to the Senate of Serampore College [University])
4th Lane, Seethamma Colony, Pattabhipuram Post, Guntur - 522006, Andhra Pradesh, India
Invites applications from committed and qualified men and women of any Christian denomination for the following degree courses in English under the Senate of Serampore College [University] system, commencing from June 2023
5 YEARS B.D.
Bachelor of Divinity
Eligibility
Intermediate pass
4 YEARS B.D.
Bachelor of Divinity
Eligibility
Graduation from any recognized University
D.C.S. (with Intermediate /+2 Pass) & 2 Qualifying papers pass
Mature Candidate with Mature Candidate Entrance Examination pass
2 YEARS B.D.
Bachelor of Divinity
Eligibility
B.Th. /B.Miss. / B.C.S. / Qualifying examination of the Senate of Serampore College [University]
Candidates willing to apply for any of the above BD degree courses can obtain application & prospectus from the Principal's office on payment of Rs 100/ (Rupees one hundred only) by MO/ DD/ Cheque. DD/ Cheque can be drawn in favor of "Bethel Bible College", payable at Guntur, Andhra Pradesh.
The duly filled-in application form with required supportive documents should reach the Principal's office on/before 30, April, 2023
Scan this QR code to download application
0863 226 2832
www.bethelbiblecollege.edu.in
bbcguntur@yahoo.co.in
https://www.facebook.com/bbcgunturap

வேத ஆராய்ச்சி - 70



Rev. Dr. D. சுரேஷ் ராஜன்

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

Author: Rev. Dr. D. Suresh Rajan

சங்கீதம் – 70

Episode - 70

முன்னுரை:-

இரட்சிப்பு வாசகர்களுக்கு இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இச்சங்கீதமானது, சங்கீதம்-40, வசனங்கள் 13முதல் 17வரையுள்ள வேதபகுதியின் மறுபதிப்பாக உள்ளது. இச்சங்கீதத்தின் தலைப்பில் ‘நினைப்பூட்டுதலாக பாடப் பட்டது’ என கூறப்பட்டுள்ளது. தாவீது அரசர், தன் வாழ்வின் பாதையில் நடந்த சம்பவங்களை நினைவுகூர்ந்து இந்த விண்ணப்பப் பாடலை பாடியுள்ள தாக நாம் பொருள்கொள்ளலாம்.

1. உதவிசெய்யும் ஆண்டவர்:- (வசனங்கள் 1, 5)

தாவீது நன்றாக அறிந்து வைத்திருந்த ஒரு விடயம்: தன் தேவையின் நேரத்தில் இறைவன் மட்டுமே தனக்கு உதவி செய்ய முடியும் என்ற சத்தியம் ஆகும். ‘‘தேவனே, என்னை விடுவியும்’’ ‘‘கர்த்தாவே, எனக்கு உதவி செய்யும்’’ என்று அவர் ஆண்டவரிடத்தில் முறையிடுவதை இங்கு நாம் பார்க்கிறோம் (வச-1). ‘‘நீரே என் துணையும் என்னை விடுவிக்கிறவருமானவர்’’ (வச-5) என்று தனது முழு நம்பிக்கையையும் இறைவன்மீது வைத்து வாழ்ந்தவர்.

அவர், சிறு வயதில் ஆட்டிடையனாய் இருந்தபொழுதானாலும், பின்பு சமஸ்த இஸ்ரவேலின் அதிபதியாக இருந்தபொழுதானாலும், யுத்தத்திற்குப் பழகின பராக்கிரமசாலியாக இருந்தபொழுதானாலும் அவர் தன்னுடைய சொந்த திறமை களையோ அல்லது சக மனிதர்களின் உதவியையோ சார்ந்துகொண்டிராமல் இறைவனை மட்டுமே முழுமையாக சார்ந்திருந்தவர் ஆவார்.

அன்பானவர்களே, நம்முடைய தேவைகளின் நேரத்தில் நாம் யாரைச் சார்ந்து இருக்கின்றோம்? ‘‘வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்’’ (சங்கீதம் 121:2) என்று சொால்லுகிறோமா? அல்லது ‘மற்ற மனிதர்கள் யாராவது உதவமாட்டார்களா?’ என அங்கலாய்த்துக்கொண்டு இருக்கிறோமா? சற்று சிந்தித்துப் பார்ப்போம்.

2. உயர்த்தும் ஆண்டவர்:- (வசனம் 3)

நாம் அனைவருமே, மற்றவர்களால் நகைக்கப்படும் மற்றும் கேவலப்படுத்தப்படும் அனுபவங்களைக் கடந்து வந்திருப்போம். சில மனிதர்களுக்கு, மற்றவர்களை மட்டம்தட்டி வாழ்வதில்தான் அவர்கள் மகிழ்ச்சியே இருக்கிறது.

தாவீது பல தருணங்களில் இத்தகைய அனுபவங்களுக்குள்ளாக கடந்து வந்திருக்கிறார்.

ஆனால், அவர் தீர்மானமாய் அறிந்துவைத்திருந்த விடயம் என்னவெனில், ‘தீய-மக்கள் வெட்கமடைந்து போவார்கள்’ என்பதே. ‘‘ஆ ஆ, ஆ ஆ, என்பவர் கள் தாங்கள் அடையும் வெட்கத்தினால் பின்னிட்டுப்போவார்களாக. (வச-3)

அன்பர்களே! உங்கள் வாழ்விலும் உங்களை பலர் எள்ளி நகையாடும்பொழுது நீங்கள் சோர்ந்துபோகாதிருங்கள். தேவன் உங்களை எள்ளி நகையாடியவர்களை வெட்கத்துக்குட் படுத்துவதோடு உங்களை நிச்சயமாக கனப்படுத்துவார்.

‘‘அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய் வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்.” (சங்கீதம்-91:15) என்பது வேதம் சொல்லும் சத்தியமாகும்.

தேவனை மட்டுமே சார்ந்துகொண்டு உங்கள் உள்ளத்தின் குமுறல்களை அவரிடம் மாத்திரமே வெளிப்படுத்துங்கள். அப்பொழுது, தேவசமாதானம் உங்களைச் சூழ்ந்து கொள்ளும் என்பது வேத-சத்தியம் ஆகும்.

3. உயர்த்தப்படவேண்டிய ஆண்டவர்:- (வசனம் 4)

‘‘உம்மைத் தேடுகிற யாவரும் உம்மில் மகிழ்ந்து சந்தோஷப்படுவார்களாக. உமது இரட்சிப்பில் பிரியப்படுகிறவர்கள் தேவனுக்கு மகிமையுண்டாவதாக என்று எப்பொழுதும் சொல்வார்களாக.” என்று சொல்லி தாவீது கடவுளை உயர்த்திப் பாடுகிறார். ஆண்டவர் நமக்கு எல்லா சூழ்நிலைகளிலும் உதவி செய்கிறவராய் இருக்கிறார்.

மட்டுமல்ல, அவரைத் தேடுகிற நமக்கு மகிழ்ச்சி யையும் மன-நிறைவையும் கொடுக்கிறார் என்பது இச்சங்கீதம் கூறும் சத்தியம் ஆகும். ஆகவே, ஆண்டவரின் மீட்பில் நம்பிக்கை கொண்டு அவரைச் சார்ந்திருப் பவர்கள் அவரை மகிமைப்படுத்த வேண்டும் என்பதை இங்கு நாம் கற்றுக் கொள்கிறோம். இறைவனே எல்லா புகழுக்கும் பாத்திரர். ஆகவே, நம் வாழ்வு இறைவனின் மாட்சிக்கு புகழ் சேர்த்து, அவரை மாத்திரம் மகிமைப்படுத்தும் வாழ்வாக இருக்க வேண்டும்.

அன்பர்களே! நம் வாழ்வைச் சீர்தூக்கிப் பார்த்து, நமது வாழ்வினாலும் வார்த்தையினாலும் தேவன் மகிமைப்படுகிறாரா? என்பதை நிதானித்து அறிந்துகொள்ள நம்மை அர்ப்பணிப்போம்.

முடிவுரை:-

அன்பார்ந்த இறை மக்களே! தாவீதைப்போல நாமும் நமது வாழ்க்கையில் இறைவன் செய்த வல்ல காரியங்களை மறுபடியும் நினைவில் கொண்டுவந்து, அவரை நம் வாழ்வின் மூலம் கனப்படுத்துவோம்.

‘‘நானோ சிறுமையும் எளிமையுமானவன்; தேவனே, என்னிடத்தில் தீவிரமாய் வாரும்: நீரே என் துணையும் என்னை விடுவிக்கிறவருமானவர், கர்த்தாவே, தாமதியாதேயும்.” என்று தாவீது ஜெபித்ததைப்போல் நாமும் ஜெபிப்போம். தேவ கிருபை நம்மோடிருப்பதாக.

சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்...

AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CO-FOUNDER, BIBLE TRANSLATION INITIATIVES, COIMBATORE, SOUTH INDIA
ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன்,
இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

# வேதாகம போட்டி-148 சரியான பதில் அளித்தோர்

1) அமலியா லோகநாதன் TVM
2) அமிர்தகனி பொன்ராஜ் CHE
3) அன்பு சுதந்திரம் TIN
4) ஏஞ்சல் சி. TIN
5) ஏஞ்சல் ராஜதுரை CHE
6) ஏஞ்சலின் பிரியா ஏ. TIN
7) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் CHE
8) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
9) அன்னாள் ஜெபக்கனி CBE
10) அனி பாய் ஜாண் TIN
11) அனிதா ஜாண் CBE
12) அனிதா மோகன்ராஜ் ERO
13) அரோமா சாத்ராக் TIN
14) ஆர்தர் மாசில்லாமணி CHE
15) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
16) பெல்சி தங்கராஜ் CHE
17) பெனிட்டா பிராங்க்ளின் CHE
18) பியூலா அலெக்ஸ் CHE
19) பியூலா ஜேசுராஜன் PON
20) செலினா பென்சி வில்சன் DR, KUW
21) சந்திராபாய் மாசிலாமணி AVD
22) சந்திரலேகா KAL-AP
23) சந்திரா சாமுவேல் TIN
24) சார்லட் டேவிட் CHE
25) சித்ரா பெஞ்சமின் TVL
26) கிறிஸ்டல் ஜாய் யோபு TPT
27) கிறிஸ்துதாஸ் GOP
28) கிறிஸ்டி ஆயீட்டஸ் TIN
29) கிறிஸ்டி ஞானராஜ் CHE
30) கிறிஸ்டி ஜேம்ஸ் SIR
31) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
32) டெய்ஸி சாம் TUT
33) டேனியல் தாமஸ் TIN
34) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
35) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
36) தெபோராாள் ஆனந்தமணி CNG
37) டெல்பி பாத்திமா CHE
38) தேவமணி ஆபிரகாம் TUT
39) தேவநேசம் ராஜாசிங் CHE
40) டோராபாய் CHE
41) எலிசபெத் செல்லத்துரை CHE
42) எமிமாள் JOL
43) எஸ்தர் D.R. TIN
44) எவாஞ்சலின் கிப்ஸன் MSK
45) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
46) ஞானம் ஜெபராஜ் TIN
47) ஞானம் பிலிப் CHE
48) ஞானராணி PAN TVL
49) கோல்டா ஜேசுபாதம் MUM
50) கிரேஸ் டேனி TEN
51) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
52) கிரேஸ்லின் சாந்தி TIN
53) கிரேனா அன்புரோஸ் CHE
54) கிரேஸி கிறிஸ்டோபர் CHE
55) கிரேஸியா ஜெயபால் CHE
56) கிரிசெல்டா செய்லர் CHE
57) ஹெலன் ஜான்சிராணி TIN
58) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
59) ஹெலன் திலக் TUT
60) ஹேமா அஜீத் CHE
61) ஹேமா கேப்ரியேல் BAN
62) ஹெப்சிபா மங்களராஜ் TIN
63) ஹிம்லா ராஜகுமாரி CHE
64) இளவரசி ஜோபிதா CBE
65) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
66) ஜமீலா செல்வராஜ் CHE
67) ஜேன்ஸ் (ஜான்ஸி) ANI
68) ஜேன் தர்மராஜ் TIN
69) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
70) ஜெயக்குமாரி CBE
71) ஜெபா ஜெயராஜ் AVD
72) ஜெபக்குட்டி மோசஸ் TIN
73) ஜெபரஞ்சிதம் மெர்லின் TUT
74) ஜெபசீலி கிளின்டன ் CHE
75) ஜெபா சீனி MKM
76) ஜெமி ஜாய் பிளஸ்ஸி TIN
77) ஜெமீலா நிக்ஸன் CHE
78) ஜெனித்தா செல்வின் TIN
79) ஜெனிட்டா ஹெலன் CBE
80) ஜென்சி ஞானேஷ் MUM
81) ஜெரின் ஸ்டீபன் CHE
82) ஜெஸி செல்லதுரை CBE
83) ஜெஸி ஜெயக்குமார் TIN
84) ஜெயா ஆல்பர்ட் KUM
85) ஜோனா ஸ்டீபன் AVD
86) ஜோஸ்பின் ஜெஸி CHE
87) ஜாய்ஸ் பாண்டியன் CHE
88) ஜூலியட் ஜெயக்குமார் TIN
89) கலா கிருபாகரன் TIN
90) கலையரசி செல்வராஜ் CHE
91) கஸ்தூரி எலியாஸ் TIN
92) கிங்ஸ்லி ரவிக்குமார் CHE

வேதாகம போட்டி-148 சரியான பதில் அளித்தோர் பட்டியலின் தொடர்ச்சி

93) கிங்ஸ்லி தங்கமணி CHE
94) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
95) லதா மைக்கேல்ராஜ் CHE
96) லீலா டேவிட் CHE
97) லீலா ஜோஸப் CBE
98) லில்லி ஜாண்ஸன் CHE
99) லிஸி டென்சிங் TIN
100) மேபல் கிறிஸ்டியான் CHE
101) மல்லிகா V. CHE
102) மல்லிகா ஜாய்ஸ் TCY
103) மணிமேகலை ஜெயக்குமார் TIN
104) மனோகரம் தனராஜ் NAZ
105) மரிய பாப்பா CHE
106) மரியாள் JS TUT
107) மெஜிலா ஜோஷ்வா TUT
108) மெர்சிபா CBE
109) மெர்சி ஃபுளோரா பாஸ்கர் VEL
110) மெரிட்டா ஜெயபாலன் TCY
111) மியூரியல் புஷ்பராஜ் CHE
112) நிக்ஸன் எவர்பிரைட் TIN
113) ஆலிவ் ஜெயபாலன் CBE
114) பாக்யபாய் ஆரோன் TIN
115) பமீலா எட்வின் KAN
116) பால் தங்கம் CHE
117) பெர்சி பால் பொன்சிங் SAW
118) பிங்க்லின் தேவமலர் CHE
119) பொன்மணி உத்தமசிங் NAZ
120) பிரேமா பூபாலன் AVD
121) பிரேமா ஜானி PCM
122) பிரேமா ஸ்டாலின் CHE
123) பிரின்ஸ் தயாநிதி CHE
124) பிரிசில்லா தாஸ் CHE
125) பிரிஸ்கில்லாள் சசி CBE
126) ரேச்சல் கனகராஜ் CBE
127) ராஜபிரமிளா TPT
128) ராஜ்மேரி சார்லஸ் KER
129) ரமோலா அதிசயராஜ் TIN
130) ராணி பிரபாகரன் TIN
131) ராணி சாமுவேல்ராஜ் CHE
132) ரத்னாவதி பாண்டியன் CHE
133) ரெஜினா விக்டர் TIN
134) ரோஸ்லின் மார்கிரெட் CHE
135) ரூபவதி நோபிள் TIN
136) ரூபி ஜாண்ஸன் TIN
137) ரூத் ஜாண்ஸன் TIN
138) சலோமி மனோகர் DR. CHE
139) சாமுவேல் டேவிட் TPT
140) சாரா பாலசிங் MDU
141) சரோஜா பாக்யசீலி பர்னபாஸ் MSK
142) சரோஜினி எலிசபெத் CHE
143) செல்வ அமுதா ஜார்ஜ் CHE
144) செல்வ பென்ஸி ஆபேல் KOT-AP
145) செல்வராஜ் CBE
146) செல்வராணி ஆல்பர்ட் CHE
147) செல்வராணி G CHE
148) செல்வி அமிர்தராஜ் TVR
149) ஷாலி எடிசன் CHE
150) சாந்தி ஆசேர் TIN
151) சாந்தி ஆல்பர்ட் PCT
152) சாந்தி ஜெபக்கனி KAL-AP
153) சாந்தி ஜெயசீலன் CHE
154) சாந்தி ரோஸ் CBE
155) ஷர்மிளா செல்வராஜ்.DR. CUD
156) ஷீபா சாம்ஸன் CHE
157) ஷெரீன் ஜெபராஜ் PAN
158) சவுந்தரம் சாலமோன் CHE
159) ஸ்டெல்லா டேவிட் TUT
160) ஸ்டெல்லா கனகராஜ் CHE
161) ஸ்டெல்லா சூசைய்யா TUT
162) சுகிர்தா ஆல்வின் CHE
163) சுஜாதா சாமுவேல் CHE
164) சுமித்ரா B. CHE
165) சுசீலா தியோடர் TCY
166) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
167) தனசீலி ஞானராஜ் CHE
168) தாரா மாணிக்கம் CHE
169) தெல்மா ஸ்டேன்லி MDU
170) உமா குளோரி CHE
171) வனஜா ஹெர்பர்ட் TIN
172) வசந்தா அன்பன் TIN
173) வசந்தா சந்திரசேகர் CBE
174) வசந்தி கருணாகரன் CHE
175) வசந்தி வாசன் CHE
176) விஜயராணி A. CHE
177) விஜி டேனியல் CHE
178) விமலா ஜெயக்குமார் TUT
179) விமலா P. CBE
180) விண்ணரசி ரோஸ் CHE
181) வினோலியா வில்சன் VAN
182) வைலட் கிறிஸ்டோபர் TIN
183) வெஸ்லி சாமுவேல் TUT

PRAYER-WINDOW  PRAYER-WINDOW

ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

## ஜெப–ஜன்னல் ஜெப நேரங்கள் மார்ச் – 2023

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 10–03–2023 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5முதல் 6மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 17–03–2023 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1முதல் 2மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 24–03–2023 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8முதல் 10மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப–ஜன்னல் ஜெப–நேரங்களில் தானி–6:10 வசனத்தின்படி **"தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க"** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப–ஜன்னல் ஜெப–வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் உங்களை வேண்டிக்கொள்கிறோம்.

# தபசுக்காலம் – 2023 — LENTEN SEASON

**From 22nd February 2023 to 8th April 2023 – பிப்ரவரி, 22 2023 முதல் ஏப்ரல், 8 2023 வரை**

தவக்காலத்தை கடைபிடித்தல்: உங்கள் திருச்சபை தவக்காலத்தை கடைபிடிக்காவிட்டாலும் கூட, தவக்காலத்தை கொண்டாடுவதன் மூலம் நீங்கள் பயனடையலாம். தவக்காலத்தின் சில முக்கிய அம்சங்கள் பின்வருமாறு: தேவாலயங்களில் தவக்காலத்தில் இருண்ட-ஊதா நிறத்தை உபயோகிப்பர். ஊதா-நிறம் மனந்திரும்புதலின் அடையாளம். இந்த நாட்களில், பாவங்களில் சிக்கித் தவிப்பவர்களக்காக செய்தவர்களுக்காக ஜெபியுங்கள்.

பாவ அறிக்கை: கடவுளின் சித்தத்திற்கு எதிராக நம் வாழ்வில் மீண்டும் மீண்டும் வரும் பாவத்தின் பகுதிகளை ஆராய்ந்து மனந்திரும்ப இந்த 40 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இது நம் மனசாட்சியை ஆராயும் காலம்.

உபவாசம் மற்றும் பிரார்த்தனை: உபவாசத்துடன் கூடிய பிரார்த்தனை மிகவும் சக்திவாய்ந்த ஒன்றாகும். உபவாசம் என்பது இந்நாட்களில் தவறாக கடைபிடிக்கப்பட்டுவருகிறது. சரியாகச் செய்தால், கடவுளுடனான நம் உறவைப் புதுப்பிக்க இது ஒரு சக்திவாய்ந்த காலமாக இருக்கும். உபவசத்தின் மாதிரிகள்: மோசே (யாத்-34:28;), எலியா (1இராஜா-19:8), இயேசு (மத்-4:2). லெந்து-கால உபவாசம் கிறிஸ்துவின் பாடுகளில் நாம் பங்கேற்க ஒரு வழியாகும்,

திருமறைத் தியானம்: லெந்து-கால திருமறைத் தியானம், கிறிஸ்துவின் பாடு-மரணம் மூலம் நமக்கு வழங்கப்படும் இரட்சிப்பை நோக்கி நம்மைத் திரும்பும் ஒரு கருவியாகும். (தியானம்: யோவே-2:12-21, மத்-4:1-11, யோனா-3:4-10)

தான-தர்மம்: லெந்து காலம் பிறரின் துன்பத்தையும் அறிந்து கொள்ளும் காலம். தேவையில் இருப்போருக்கு உதவிசெய்ய புணம், உணவு, உடை அல்லது பிற-பொருள்களை வழங்காலம். தொண்டு நிறுவனங்கள் வாயிலாக உதவிகள் செய்யலாம்.

தவக்காலம் என்பது உலகைவிட்டு விலகியிருக்கும் காலம். இந்த நோன்பு காலத்தில், கடவுள் யார்? அவர் நமக்கு என்ன செய்திருக்கிறார்? என்பதை சிந்தித்து, கடவுளைத் துதிக்கும் துதியுடன் ஈஸ்டர் பண்டிகைக்குத் தயாராவோம்.

# வேதாகம போட்டி-149

வேதபகுதி எரேமியா முழுவதும்

ஓரிரு வார்த்தைகளில் பதிலளிக்கவேண்டும்

பதில்களுடன் வேதவசன இருப்பிடம் எழுதவேண்டும்

பதிலளிக்க கடைசி நாள் மார்ச்-25

1. எரேமியா தீர்க்கதரிசியின் கழுத்திலிருந்த நுகத்தை உடைத்துப்போட்டது யார்?
2. ஆதிமுதற்கொண்டு உயர்ந்த மகிமையுள்ள சிங்காசனமாயிருக்கிறது எது?
3. இரும்பெழுத்தாணியாலும், வைரத்தின் நுனியாலும் எழுதப்பட்டது எது?
4. ஐபிராத்து நதியோர கன்மலை வெடிப்பில் எதை ஒளித்துவைக்க கர்த்தர் சொன்னார்?
5. யாருடைய பட்டணங்களின் இலக்கமும், தேவர்களின் இலக்கமும் சரி?
6. யார், இருதயத்திலே விருத்தசேதனமில்லதவர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
7. சஞ்சலத்தில் ஆறுதலடையப் பார்த்தும் எது பலட்சயமாய் இருக்கிறது?
8. ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது எது? ஒளியில்லாதிருந்தது எது?
9. 'அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தமே அழுவான்.' - சரியா தவறா?
10. 'பாபிலோன்' கர்த்தருடைய கையிலுள்ள பொற்பாத்திரம்' - சரியா தவறா?
11. 'தேசத்தின்மேல் மழை இல்லாததினால் பாறை வெடித்திருக்கிறது' - சரியா தவறா?
12. 'கோதுமையை விதைத்தார்கள் முள்ளுகளை அறுப்பார்கள்' - சரியா தவறா?
13. 'இவன்' சிதேக்கியாவின் குமாரரை அவன் கண்களுக்கு முன்பாக வெட்டுவித்தான்:
அ) பார்வோன் ஆ) ரப்சாரீஸ் இ) ரப்மாக் ஈ) பாபிலோன் ராஜா
14. 'இவைகள்' மேடுகளில் நின்று வலுசர்ப்பங்களைப்போல் காற்றை உட்கொள்கிறது:
அ) காண்டாமிருகங்கள் ஆ) காட்டுக்கழுதைகள் இ) மான்கள் ஈ) ஓநாய்கள்
15. எல்லாவற்றைப்பார்க்கிலும் 'இது' திருக்கும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது:
அ) நாவு ஆ) கோபம் இ) இருதயம் ஈ) பொறாமை
16. எந்த மனுஷன் 'இந்த காய்களை' தின்பானோ, அவன் பற்களே கூசிப்போகும்:
அ) நெல்லி ஆ) திராட்சை இ) குமட்டி ஈ) வெள்ளரி
17. கோபங்கொண்ட கொடும்புசல் காற்று, இது கடல்-காற்று அல்ல!
தலையில் அடித்து தாக்கும் காற்று, இது தரை-காற்று அல்ல!
ஆண்டவரின் பெருங்காற்று, இது ஆடி-காற்று அல்ல! இதன் பெயர் என்ன?
18. மண்மேடாகும் 'மெட்ரோ சிட்டி'! பாம்பு-புற்றாகும் 'பாப்புலர் சிட்டி'! குடியற்று காடாகும் 'கிளாஸிக்-சிட்டி'! இது என்ன?
19. எதிர்நாட்டின் சிறையான எழுத்தரின் வீடு! பாதாள அறைகொண்ட 'பங்களா' வீடு! தீர்க்கனை அடைத்து வைத்த 'திகில்' வீடு! இது யாருடைய வீடு?
20. பிள்ளைகளை எரித்திட பள்ளத்தாக்கு-மேடை! ஹவுஸ் - ஃபுல் ஆகும் கல்லறை தோட்டம்! மறுபெயர் பெற்ற மரண-பள்ளத்தாக்கு! இது என்ன? மறு-பெயர் என்ன?

**வேதாகம போட்டிக்கான பதில்களை அனுப்பவேண்டிய முகவரி**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

**ADDRESS FOR SENDING ANSWERS OF BIBLE CONTEST**

Mrs. Jeyaseeli Dharmaraja, Flat: F-1, First floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93.
E-mail: ratchippu@hotmail.com/siddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463



சகோ. C. ஏஞ்சல்

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

YOUR SALVATION AND YOUR REDEEMER MOVO SHIECH WEGO ALECH

## உன் இரட்சகரும் உன் மீட்பரும்

EPISODE - 46 மோவோ ஷியேக் வேகோ அலேக் பாகம் - 46

கர்த்தரும் யாக்கோபின் வல்லவருமாகிய நான் உன் இரட்சகரும் உன் மீட்பருமானவர் என்பதை மாம்சமான யாவரும் அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஏசா–49:26பி

All flesh shall know that I the Lord am thy Saviour and thy Redeemer, the mighty one, of Jacob. Isa-49:26b

ஒரே தரம் பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, தம்முடைய சொந்த இரத்தத்தினால் நித்திய மீட்பை உண்டுபண்ணின இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு லெந்து-கால ஸ்தோத்திர வாழ்த்துக்கள்.

சங்-62:7 என் இரட்சிப்பும் என் மகிமையும் தேவனிடத்தில் இருக்கிறது.

சங்-18:46பி என் இரட்சிப்பின் தேவன் என் வாழ்வில் உயர்ந்திருப்பாராக.

சங்-96:2 கர்த்தரை (நமக்காக தம் சொந்த குமாரனை தியாக பலியாக ஒப்பு வித்தவரை) பாடி, அவருடைய நாமத்தை (இந்தியாவின் எல்லையில் உள்ளவர் களெல்லாம் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் இரட்சிப்பைக் காணும்படி செய்த இயேசுவின் நாமத்தை) ஸ்தோத்தரித்து, நாளுக்கு நாள் அவருடைய இரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள்.

ஏசா-49:7 நம் மீட்பர் யார்? நமக்காக மனுஷரால் அசட்டைபண்ணப்பட்டவர், ஜாதிகளால் அருவருக்கப்பட்டவர் என்பதை அறிவிக்கவே சகல அக்கிரமங்களி னின்றும் தமது சொந்த இரத்தத்தினால் நம்மை மீட்டு, தம் சொந்த ஜனமாக, இரட்சகரிடம் பரிந்துபேசுகிற ஆசாரியக் கூட்டமாக அபிஷேகித்தவர். அவருக்கு பிரதிபலனாக, பக்திவைராக்கியம் உடையோராக, நற்கிரியை செய்வோராக, நமக்கென்று வைக்கப்பட்டுள்ள சிலுவையைச் சுமக்க நம்மை அர்ப்பணிப்போம். நாம் வல்லமையோடு எழும்பும்படிக்கு அப்போஸ்தலர் காலத்து அபிஷேகத்தை நம்மேல் ஊற்றி, இரும்பை நம் பாதரட்சையின் கீழ் கொண்டுவருவார். வெண்கலம் போன்ற பிரச்சனையை உளுத்த மரமாக பார்க்க வைப்பார். நம்மீது தம் கண்ணை வைத்து நமக்கு ஆலோசனை சொல்வார். அல்லேலூயா.

ஜெபம்: உலகத்தின் பாவத்தினின்று எங்களை மீட்டெடுத்த இரட்சகரே! உமது இரட்சிப்பில் மகிழ்ந்து உம் நாமத்தில் உமது இந்தியாவில் சிலுவைக் கொடியை ஏற்றுவோம். எங்கள் வேண்டுதல்களை நீர் நிறைவேற்றுவீர். நாங்கள் நின்று, எங்களுக்குச் செய்யும் இரட்சிப்பை (இந்தியாவில், எங்கள் குடும்பத்தில், நித்திய-ஜீவனுக்காக நியமிக்கப்பட்ட(அப்-13:48) அனைவரும்) காண்போம். ராஜாக்கள் உம்மைக் கண்டு, பிரபுக்கள் எழுந்திருந்து உம்மைப் பணிந்துகொள்வார்கள். இயேசுவின் நாமத்தில். ஆமேன்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி

**C. Angel**

**தேன்துளி வேதவசனக் கதை–142*. . .**

# நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்து உயர்த்தும் இயேசு

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A. M.Ed.



சகோ. அசரியா

ஜோன்ஸ் என்ற ஒரு மனிதர் குஜராத் மாநிலத்தில் ஜவுளிக்கடை நடத்தி வந்தார். பிரசித்தி பெற்ற அவரது கடை, வியாபார சூழ்நிலையில் நஷ்டம் அடைந்தது. வியாபார நஷ்டங்கள் அவரை ஏழ்மை நிலைக்குள் தள்ளிவிட்டன. இந்த சூழ்நிலையில், ஜோன்ஸ் தனது உறவினர் ஒருவரின் திருமணத்திற்கு பழைய ஆடை அணிந்து கொண்டு ஏழ்மைக் கோலத்தில் சென்றார். அவரை நன்கு அறிந்தவர்கள்கூட அவரைக் கண்டு கொள்ளவில்லை. அவரை ஒருவரும் வரவேற்கவுமில்லை. அந்த திருமண விழாவில் கடைசி பந்தியில் மேஜை வரிசையில் அமர்ந்து சாப்பிட்டார். அந்நேரம் அங்கிருந்த சிலர், ‘‘நீங்கள் தரையில் உட்கார்ந்து சாப்பிடுங்கள்’’ என்று கூறினார்கள். இதைக் கேட்ட ஜோன்ஸின் உள்ளம் உடைந்தது. அவர், ‘‘ஆண்டவரே, இந்த தாழ்வில் என்னை நினைக்க மாட்டீரா?’’ என்று சொல்லிக் கொண்டே கண்ணீர் மல்க அங்கிருந்து வெளியேறினார். ஆகாரின் கண்ணீரைக் கண்டு விடுதலை அளித்த தேவன் ஜோன்ஸின் கண்ணீருக்கும் பதில் கொடுத்தார்.

நாட்கள் சென்றன, ஜோன்ஸ் தன் கடின உழைப்பால், மீண்டும் ஒரு சிறிய ஜவுளிக் கடையை ஆரம்பித்தார். ஓய்வுநாளில் கடையை திறக்காமல் மனைவி, பிள்ளைகளுடன் ஆலய ஆராதனையில் பங்குபெற்றார். ஆராதனை தொடங்கும் முன்பே ஆலயம் சென்று ஆலயப்பணிவிடைகளில் ஈடுபட்டார். அவரது இரண்டு பெண்பிள்ளைகளும் Sunday School மற்றும் VBS பணிகளில் ஈடுபட்டார்கள். குடும்பமாக சுவிசேஷப்பணி, கல்வி மற்றும் மருத்துவப் பணிகளில் ஈடுபட்டு அநேகரை இயேசுவண்டை வழிநடத்தி னார்கள். சில மாதங்களில், ஜோன்ஸ் ஆரம்பித்த ஜவுளிக்கடை வளர்ந்து பெரிய கடையாக மாற தேவன் கிருபை செய்தார். பிள்ளைகளின் திருமணத்தை சிறப்பாக நடத்தி குடும்பமாக இயேசுவுக்கு சாட்சியாக விளங்கினார் ஜோன்ஸ்.

நம் வாழ்வில்கூட குறைவுகளையும், தாழ்வுகளையும் சந்திகிற நாட்களில் இயேசு கிறிஸ்து வுக்கு பிரியமான வாழ்வு வாழும்போது, ஆண்டவர் நம்மை உயர்த்த வல்லவராயிருக்கிறார். யோபுவைப்போல நம்முடைய வாழ்க்கையில் சோதனைகளை பொறுமையாய்ச் சகிப்போ மானால் நாம் கலங்கவேண்டியதில்லை. எந்த நிலையிலும் நம்மை அதிசயமாய் வழிநடத்த வல்லமையுள்ள தேவன், குறைவுகளை நீக்கி நம்மை மேன்மைப் படுத்துவார். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

“நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது.” சங்கீதம் 136:23.

“எவரையும் மேன்மைப்படுத்தவும், பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும்” 1நாளாகமம் 29:12

EPISODE 8

# இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

## இரண்டாயிரம் ஆண்டு வரலாறு..
## இரண்டாம் வருகைக்கு தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்



**இந்திய திருச்சபை சரிதை:**
**(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)**
**தொகுதி-2 பகுதி-3**

2. இந்திய இடைக்காலத்தில் கிறிஸ்தவர்கள்

3. இந்தியாவுக்கான மதகுரு பயணிகள்

இந்த காலகட்டத்தில் இந்தியாவிற்கு வருகை தந்த

வெளிநாட்டவர்கள், மற்றும் அவர்கள் எழுத்துக்களில் இருந்து பெறக்கூடிய சான்றுகள் நாம் கிறிஸ்தவர்களைப் பற்றி அறிந்துகொள்ள எஞ்சியிருக்கின்றன. முதல் கிறிஸ்தவ சாட்சியாக நாம் ஜான் ஆ.்.ப் மான்டே கோர்வினோவை எடுத்துக் கொள்ளலாம். கி.பி.1247ல், பிரான்சிஸ்கன் ஆணைப்படி அனுப்பப்பட்ட இத்தாலியர். இவர் ஒரு அனுபவமிக்க மிஷனரி. இவர் காம்பாலெக்கில் (பீக்கிங்கின் பண்டைய பெயர்) உள்ள மகா-கானுடன் தொடர்பு கொள்ளும் அளவுக்கும் சீனாவிற்கு ‘போப்’பாக நியமிக்கப்படும் அளவுக்கும் வெற்றி பெற்றார். கிறிஸ்தவர் களால் பெரிதும் மதிக்கப்படுபவர். மேலும், கிறிஸ்தவர் அல்லாதவர்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்தியவர். ஜான் 13மாதங்கள் இந்தியாவில் இருந்தார்.

ஜான் ஒரு தீர்க்கமான நல்ல பார்வையாளராக இருந்தார், அவர் 13மாதங்கள் இந்தியாவில் வாழ்ந்த நாட்களில், அப்போஸ்தலன் தாமஸின் கல்லறை பகுதியின் சுற்றுப்புறத்தை கண்டறியவே முழுவதுமாக செலவிட்டார். அவரது மொழி மிக வும் தெளிவற்றது. அந்த தேவாலயம் யாருடையது என்றும் கிறிஸ்தவர்கள் யார் யார்? என்றும் அவர் சொல்லவில்லை. அவர்களுடனான தமது உறவின் தன்மையையும் அவர் வரையறுக்கவில்லை. அப்பகுதியில் வெவ்வேறு இடங்களில் சுமார் 100பேர் ஞானஸ்நானம் பெற்றதாக அவர் குறிப்பிடுகிறார்.

ஜான் ஆ.்.ப் மான்டே கோர்வினோவின் பயணத்தின் துணைவராக வந்த நிக்கோலஸ் (.்.பிரயார்), பீக்கிங்கின் முதல் லத்தீன் பேராயராக அவருக்கு கீழ் வாக்குரிமை பெற்றவர். 80வயதுக்கு மேற்பட்டவர், இவர் இந்தியாவில் இறந்தபோது மற்ற போதகர்கள் போன்று ஆலய வளாகத்தில் அடக்கம் செய்யப்பட்டார்.

இது கி.பி.1307ல் நடந்ததாகத் தெரிகிறது. ஜான் இறந்தது கி.பி.1328ல், அப்போது தன் சீனப் பயணத்தின் போது, தெற்குப் பாதையில் பயணம் செய்தார். இந்த இருவருடைய எழுத்துக்களில் மூன்றில் ஒரு பகுதி மாத்திரமே பாதுகாக்கப் பட்டிருக்கிறது என்பது மிகவும் வருத்தம் தருகிறது. ஜான் என்று பெயர் வைத்தாலே அப்பகுதியினர் கிறிஸ்தவர்கள் என்று கூறுகின்றனர். நெஸ்டோரியர்களுடன் அவருக்கு உறவு இருந்ததாகவும் தெரிகிறது.

இந்துக்கள், கிறிஸ்தவர்களைப் போல் இல்லை, அவர்கள் உருவ வழிபாடு செய்பவர்கள். அவர்கள் ஒருபோதும் வழிபாட்டில் ஒன்றுசேர மாட்டார்கள், ஒவ்வொருவரும் தனக்கு விருப்பமானபோது வழிபாட்டிற்குச் செல்கிறார்கள் என்பதை அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்தவர் டொமினிகன் ∴பாதர்-ஆன ஜோர்டானஸ். இவர் கி.பி.1321 மற்றும் 1322ல் இந்தியாவில் இருந்ததாக நம்பகமான சான்றுகளால் உறுதிப்படுத்தப் பட்டது. அந்நாட்களில் இந்தியாவில் இருந்து அவர் எழுதிய இரண்டு கடிதங்கள் இன்றும் உள்ளன.

முதல் கடிதம் நான்கு துறவிகளின் தியாகத்தைப் பற்றி சிறிது விரிவாகக் கூறுகிறது. அவர்களின் பெயர்கள் டோலண்டினோவின் தாமஸ் (70வயதை எட்டிய மரியாதைக்குரிய மனிதர்), ஜேம்ஸ் ஆ∴ப் பதுவா, சியானாவைச் சேர்ந்த பீட்டர் மற்றும் ஜார்ஜியரான டெமெட்ரியஸ் ஆகியோர். இவர்கள் அனைவரும் தம்-தம் மொழிகளில் வல்லுநர்கள்.

இரண்டாவது கடிதத்தில், அவரது தனிமை துன்பங்கள், மற்றும் பல தவறான சகோதரர்களின் புகார்களுக்குப் பிறகான அவரது விலகல் உட்பட, பல விவரங்களை அவர் குறிப்பிடுகிறார். ஜோர்டானஸ், இந்திய மக்களின் மனமாற்றத்தின் சாத்தியக் கூறுகள் பற்றி ஓரளவு நம்பிக்கையுடன் எழுதுகிறார். இந்தியாவில், பரோச்கோ நகரில் பல நபர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததாக அவர் கூறுகிறார். இந்தியாவில் சுமார் 300 ஆத்துமாக்களை ஞானஸ்நானம் செய்து விசுவாசத் திற்குள் கொண்டு வந்தேன், அவர்களில் பலர் விக்கிரக ஆராதனை செய்பவர் களாகவும், சரசன்களாகவும் இருந்தனர் என்று கூறுகிறார்.

அடுத்தவர் ஓடோரிக் ஆ∴ப் போர்டினோன். ஓடோரிக் கி.பி.1322ல் இந்தியாவிற்கு வந்து தானாவிற்கு சென்றார். தானாவில் பதினைந்து கிறிஸ்தவக் குடும்பங்கள் வாழ்ந்ததாக அவர் கூறுகிறார். ஓடோரிக் அவரது பயணத்தின்போது குயிலானில் நின்றார், அதை அவர் விந்தையாக பொலம்பம் என்று அழைத்தார். ஆனால், ஏமாற்றமளிக்கும் வகையில், கிறிஸ்தவர்கள் பற்றி அவர் அதிகம் சொல்ல வில்லை.

இரண்டு நகரங்களைப்பற்றி அவர் குறிப்பிடுகிறார். ஒன்று, 'சிங்கிலின்', இது கிராங்கனூரைத் தவிர வேறில்லை. மற்றொன்று, '∴பிளாண்ட்ரினா', இது கோழிக்கோடுக்கு வடக்கே பண்டாரணியுடன் ஒத்ததாக இருக்கலாம், நாட்டின் பழக்கவழக்கங்கள் பற்றிய ஓடோரிக்கின் கணிப்பு என்னவெனில், ∴பிளாண்ட்ரினா வில் வசிப்பவர்களில் சிலர் யூதர்கள் மற்றும் சிலர் கிறிஸ்தவர்கள். இவ்விரு நகரங்களிலும் எப்போதும் உள்நாட்டுப் போர் இருக்கும், ஆனால் முடிவில் கிறிஸ்தவர்கள் யூதர்களை ஜெயிக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறார்.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd.,
(Pope's College Sawerpuram), Thiruvanmiyur, Chennai. South India

# ஜெப-ஜன்னல் நன்றி-பலிகள்

**கர்த்தரை நோக்கி மன்றாடி ஜெபிப்போம் - Come! Let us intercede to God**

1) அகில உலக மக்களின் சுக வாழ்வுக்காக... உக்ரைன்-ரஷ்யா போர் முடிவுக்கு வர... துருக்கி, சிரியா நாடுகளில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக... இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளின் பொருளாதாரம் மேம்பட... பெருந்தொற்று, புயல்-மழை, பூமி-அதிர்ச்சி, எரிமலை, காட்டுத்-தீ போன்ற பேரிடர்களிலிருந்தும், பிரிவினை வாதம் - தீவிரவாதங்களிலிருந்தும் மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்திய பொருளாதாரம் சீரடைய... இந்தியாவில் மத வாதம், வன்முறைவாதம், பிரிவினைவாதம் வேரறுக்கப்பட... ஒன்றிய அரசு எல்லா மாநிலங்களையும் சமமாய் பாவித்து, மாநிலங்களுக்கு சேரவேண்டிய நிலுவைத் தொகையை பாரபட்சமின்றி வழங்க... விலைவாசிகள் குறைய... இந்திய நீதிமன்றங் களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... மக்கள் இன -மத - மொழி வேறுபாடின்றி வாழ... தமிழ்நாட்டில் விவசாயம், தொழில்கள், வியாபாரம் சிறக்க... தமிழ்நாட்டில் மத-பிரிவினை வாதங்கள், வன்முறைவாதங்கள் கட்டுப்படுத்தப்பட... புயல் - மழை - வெள்ளம் பாதிப்புகள் நீங்க... தமிழ்நாட்டில் கிறிஸ்தவ திருச்சபை மக்களின் ஒற்றுமைக்காக...

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) லீனா ரோஸ், நிதின் ஜோயல், ஜாஷ்வா ஆகிய 12ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்காக... 10, 11ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவர் களுக்காக... உயர் கல்வி பயின்று வரும் நம் பிள்ளைகள் கி.ஃ.ப்ட்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜாஷ்வா மேத்யூ, ஷெர்லி ஜூடியா, டிரிசியா லவ்ஸ்லி, ஜாய்ஸ் கிறிஸ்டினா, ஜோ.ஃ.ப்னா, ஜெனிபர், சிந்தியா பிரகாஷ் ஆகியோருக்கு ஞானம் வழங்கப்பட...

6) திரு. பால் நந்தகோபால், திருமதி. சுந்தரிபாய், திருமதி. ரூபவதி நோபிள், திருமதி. புஷ்பா, திருமதி. ஜெயா சாமுவேல், திரு. அப்பன் டேவிட், திருமதி. ஜரீன் வாக்கர், திருமதி. எஸ்தர், திருமதி. ஃபிளாரன்ஸ் ராஜமணி, திருமதி. எபனேசர், திரு. பிலிப், திருமதி. ஞானரத்தினபாய், திருமதி. தங்கம் ஜோன்ஸ், திருமதி. மேரி கிரேஸ், திரு.பி.எச். ஜெயச்சந்திரன், திருமதி. வசந்தா அன்பன் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

7) திருமதி. சுகிர்தா சின்னதுரை, திருமதி. மேரி தேவதாஸ், திருமதி. வனஜா ஹெர்பர்ட், திருமதி. ரூபி ஜாண்சன், திருமதி. மெர்சி தனராஜ், திருமதி. சார்லெட் டேவிட், திருமதி. ஜெஸி ஜெயக்குமார் ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

8) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. ரூபி போஸ்கோ, திரு. நிக்ஸன் எவர்பிரைட், திருமதி. ஸ்டெல்லா கனகராஜ், திருமதி. கிரிசெல்டா செய்லர், திருமதி. கிறிஸ்டி ஞானராஜ், திருமதி. நிறைமதி ஜாண்ஸன், திருமதி. சுவர்ணலதா அற்புதராஜ், செல்வி. ஷைனி, திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திரு.எஸ்.ஜே.பி. ராஜா, திரு. அசரியா ஞானதாஸ் ஆகியோருக்காக அவர்களது குடும்பங்களுக்காக...

9) திருமதி. தனுஸ்ரீ, திருமதி. வினோ கிப்சன், திருமதி. ஹனா டைடஸ், திருமதி. பிரீத்தி சைமன் ஆகியோரது சுக பிரசவத்துக்காக...

# வேதாகம போட்டி-148 (ஏசாயா)

## சரியான விடைகள்

1. மோவாபியர் ஏசாயா:-16:7
2. கர். ஆவியானவர் ஏசாயா:-59:19
3. நேர்மையாய் நடந்தவர்கள் ஏசா:-57:2
4. 1,85,000 பேர் ஏசாயா:-37:36
5. எருசலேமின் மேல் ஏசாயா:-31:5
6. போஜன பீடங்கள் ஏசாயா:-28:8
7. 70 வருஷம் ஏசாயா:-23:17
8. ஆர், கீர் ஏசாயா:-15:1
9. தவறு ஏசாயா:-1:22
10. தவறு ஏசாயா:-48:22
11. சரி ஏசாயா:-5:7
12. தவறு ஏசாயா:-60:22
13. ஈ - பலன் ஏசாயா:-61:7
14. இ - ஆறுகளை ஏசாயா:-43:2
15. இ - தீமோனின் ஏசாயா:-16:9
16. அ - தாவீது ஏசாயா:-1:1
17. அடையாளம் ஏசாயா:-7:10-14
18. சேராபீன்கள் ஏசாயா:-6:2
19. சூரிய கடிகாரம் ஏசாயா:-38:6-8
20. கோரேஸ் ஏசாயா:-45:1-6

## CONTACT DETAILS AND BANK DETAILS OF OUR MINISTRIES

**CONTACT DETAILS OF OUR MINISTRIES:**

**CALL:** 9962924900/9789914464.

**WHATSAPP:** 9789914463/7871676100

**E-MAIL:** ratchippu@hotmail.com/ sjddharmaraja@gmail.com

**POSTALADDRESS:** REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93.

**WEBSITE ADDRESS:** www.ratchippu.in/ratchippu.in

**BANK DETAILS FOR SENDING OFFERTORY**

**NAME:** DHARMARAJA SJD.

**S.B.ACCOUNT NO:** 601071548.

**BANK:** INDIAN BANK,

**BRANCH:** NESAPAKKAM BRANCH

**IFSC CODE:** IDIB000N122.

**BANK ADDRESS:** K.K.NAGAR, CHENNAI-78.

**GOOGLE PAY (G-PAY) NAME AND NO.:** REV. DHARMARAJA SJD: 9789914463

# தபசுக்காலம் ஒரு பாரம்பரியம்

40-நாள் இராப்பகல் வனாந்தரத்தில் உபவாசித்த இயேசுவானவருடைய மாதிரியின் படி (மத் 4, மாற் 1, லூக் 4) கிறிஸ்துவின் விசுவாசிகள் கடைபிடிக்கும் 40-நாள் உபவாச காலம் தபசுகாலம் எனப்படுகிறது. ஆதி-அப்போஸ்தலர் காலத்தில் இது நீண்டகால ஆசரிப்பாக இருந்ததாக கி.பி.4ம் நூற்றாண்டின் திருச்சபை-தந்தையர்கள் கூறுகின்றனர். இது கி.பி.7ம் நூற்றாண்டில் ‘சாம்பல்-புதன்’ முதல் ‘புனித-சனி’ வரையில் 40நாள் கடைபிடிக்கும் வகையில் ஜெபம், தவம், சுய-வெறுப்பு, ஈகை ஆகியவற்றிற்கு அடையாளமாக ரோம-திருச்சபையால் உறுதி செய்யப்பட்டது.

தவக்காலம் என்பது மனந்திரும்புதல் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றிற்கான காலமாகும். இவ்வாறாக பாவத்துக்கு விலகி, பரிசுத்தத்துக்கு தங்களை அர்ப்பணிக்க விசுவாசிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கிருபையின் காலமாகும் இது.

Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 10th March 2023.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.

# செய்தித்துளிகள்

1. ரஷிய-உக்ரைன் போர் தொடங்கி ஓராண்டு நிறைவடைந்த நிலையில், ரஷியப் படைகள் உக்ரைனைவிட்டு வெளியேறவேண்டும் என ஐ.நா தீர்மானம். இந்தியா உள்பட 32-நாடுகள் வாக்கெடுப்பைப் புறக்கணித்தன.

2. இந்தியாவில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்படுவதை ஒரு மாதத்துக்குள் உறுதி செய்ய வேண்டும் என மத்திய, மாநில அரசுகளுக்கு சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு.

3. வெளிநாட்டில் மருத்துவ படிப்பை முடித்தவர்கள் தமிழ்நாட்டில் உள்ளுறை பயிற்சி மேற்கொள்வதற்காக 72-மருத்துவ கல்லூரிகளில் 4430-இடங்களுக்கு அனுமதி தரப்பட்டதாக தேசிய மருத்துவ ஆணையம் தகவல்.

4. பொதுத்துறை வங்கிகளில், கடன்-சொத்து வளர்ச்சியில் பாங்க் ஆஃப் மகாராஷ்டிரா முதலிடம். கடந்த 10-காலாண்டுகளில் 21.67சதம் வளர்ச்சி மற்றும் வங்கிக் கடன் உயர்வைப் பதிவு செய்து முதலிடம் பெற்றுள்ளது.

5. பல்கேரியாவின் புளோடிவ்வில் ஏப்ரல் 1-முதல் 9-வரை நடைபெறும் உலக ஜூனியர் மற்றும் கேடட் வாள்வீச்சு சாம்பியன்ஷிப்பிற்கான வீரர் மற்றும் வீராங்கனைகள் கொண்ட இந்திய-அணி அறிவிக்கப்பட்டது.

**Posted on: 10th March 2023**

**To**

If undelivered Please return to:

**REV.S.J.D. DHARMARAJA**
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2-A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI-93 TAMIL NADU SOUTH INDIA

Owned & Published by: S.J.D. Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.